படகுகளை மீட்க முயற்சி

தமிழக மீனவர்களின் உரிமைகளை மத்திய அரசு எப்போதும் பாதுகாக்கும்

பிரதமர் நரேந்திர மோடி உறுதி

மாண்புமிகு த
திரு. எடப்பாடி K.
நாள்: 14, பிப்ரவரி 2021

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரெயில் பயணிகள் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் உள்ளனர்.

தமிழக மீனவர்களின் உரிமைகளை மத்திய அரசு எப்போதும் பாதுகாக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்தார்.

சென்னை, பிப்.15-
தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச்செல்கிறபோது, அவ்வப்போது இலங்கை கடற்படை, கடலோர காவல் படையின் தாக்குதலுக்கு ஆளாகும் துயர சம்பவங்கள் நடக்கின்றன.

புதிய நம்பிக்கை

இதனால் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி விடுகிறது. பல நேரங்களில் அவர்களின் படகுகளும் பறிக்கப்படுகின்றன. அவர்களது உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத சூழலும் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சென்னையில் நேற்று ரூ.8,126 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைக்க வந்த பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், தமிழக மீனவர்களின் உரிமைகளை மத்திய அரசு எப்போதும் பாதுகாக்கும் என்ற புதிய நம்பிக்கையை அளித்தார்.

விவசாயிகளுக்கு பாராட்டு

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்த விழாவில் பேசும்போது பிரதமர் மோடி கூறியதாவது:-

சென்னையில் இருப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அறிவார்ந்த, படைப்பாற்றல் கொண்ட மக்கள் நிறைந்த சென்னையில் உற்சாகமும், ஆற்றலும் நிறைந்திருக்கிறது. எனக்கு அன்பான வரவேற்பை அளித்த சென்னை மக்களுக்கு நன்றி.

636 கிலோ மீட்டர் தூர கல்லணை கால்வாய்க்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. 2.27 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புக்கான பாசன வசதியை இது முன்னேற்றும். தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் சிறப்பாக பயனடையும். உணவு தானிய உற்பத்தியில் சாதனை படைத்ததற்காகவும், நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்காகவும் தமிழக விவசாயிகளை நான் பாராட்டுகிறேன். நமது கடந்த காலத்தின் பெருமைமிகு சின்னமாக கல்லணை திகழ்கிறது.

மெட்ரோ ரெயில் திட்டங்கள்

சென்னை வண்ணாரப்பேட்டையில் இருந்து, விம்கோநகர் வரை செல்லும் மெட்ரோ ரெயில் திட்டம், கொரோனா தொற்றுக்கு இடையிலும், உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளது. இந்திய ஒப்பந்ததாரர்கள் பணிகளை மேற்கொண்டனர். ரெயில் பெட்டிகள் உள்நாட்டிலேயே வாங்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், திட்டத்தின் 2-ம் கட்டத்தில் 119 கி.மீ தூரத்திற்கான பணிகளுக்கு ரூ.63 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு நகரிலும் இல்லாத வகையில், ஒரே சமயத்தில் இந்த அளவுக்கு நிதி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதியை அதிகரிப்பதுடன் வணிகத்துக்கும் உதவுகிறது. இதனால் தங்க நாற்கர வழித்தடத்தின் ஒருபகுதியாக போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னை கடற்கரை-எண்ணூர் - அத்திப்பட்டு பிரிவின் 4-ம் வழித்தடம் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை துறைமுகத்துக்கும், காமராஜர் துறைமுகத்துக்கும் இடையே விரைவான சரக்கு போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். சென்னை கடற்கரை, அத்திப்பட்டு இடையேயான இந்த 4-வது வழித்தடம் இதற்கு உதவும். விழுப்புரம்-தஞ்சாவூர்-திருவாரூர் மின்மயமாக்கல் திட்டம், டெல்டா மாவட்டங்களுக்கு பெரிதும் பயன்படும். 228 கி.மீ தூர வழித்தடமானது, உணவு தானியங்களை மிக விரைவாக எடுத்துச் செல்வதற்கு உதவும்.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு

இந்தியா, பாதுகாப்புத்துறையில் தன்னிறைவை அடையும் மகத்தான முயற்சியை மேற்கொண்டுள்ளது. 2 பாதுகாப்பு தளவாட வழித்தடங்களில் ஒன்று தமிழகத்திற்கு வருகிறது. இந்த வழித்தடம் ஏற்கனவே ரூ.8,100 கோடிக்கான முதலீட்டு உத்தரவாதங்களைப்பெற்றுள்ளது. முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள அதிநவீன அர்ஜூன் மார்க் 1-ஏ பீரங்கி, உள்நாட்டு வெடி பொருட்களைப்பயன்படுத்தக்கூடியதாகும்.

தமிழகம் ஏற்கனவே, வாகன உற்பத்தியின் மையமாக திகழ்கிறது. பீரங்கி உற்பத்தி கேந்திரமாகவும் உருவெடுத்து வருகிறது. தமிழகத்தில் உருவாக்கப்பட்ட இந்த பீரங்கி நாட்டின், வடக்கு எல்லைகளைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப்படுவது, இந்தியாவின் ஒன்றுபட்ட உணர்வைப் பிரதிபலிக்கிறது.

படைகளுக்கு பாராட்டு

நமது ஆயுதப்படை உலகின் மிகச் சிறந்த நவீன படையாக திகழ்வதற்கு நாம் தொடர்ந்து பாடுபடுவோம். இந்தியாவை பாதுகாப்புத்துறையில் தற்சார்புகொண்டதாக உருவாக்குவதில் முனைப்புடன் கவனம் செலுத்துவோம். இந்தியாவின் துணிச்சலை பறைசாற்றும் வகையில் நமது ஆயுதப்படைகள் திகழ்கின்றன.

நாட்டைப் பாதுகாப்பதில் முழு திறனுடன் உள்ளதை அவர்கள் மீண்டும், மீண்டும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நிரூபித்து வருகின்றனர். இந்தியா அமைதியில் நம்பிக்கை கொண்டுள்ளது என்பதை சமயம் கிடைக்கும்போதெல்லாம் உணர்த்தி வருகின்றனர். அதே தருணத்தில், இந்தியா தனது இறையாண்மையை எப்பாடுபட்டாவது பாதுகாக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் திகழும் நமது படைகளின் திறம் போற்றுதலுக்குரியது.

கடல் பாசி பூங்கா

சென்னை ஐ.ஐ.டி.யின் டிஸ்கவரி வளாகம், புதுமை படைப்பதில் முன்னணி மையமாக உருவெடுக்கும் என்று நம்புகிறேன். இந்தியாவை உற்சாகத்துடனும், ஆக்கப்பூர்வமான சிந்தனையுடனும் உலகம் நோக்குகிறது. 130 கோடி இந்தியர்களின் கடின உழைப்பால்தான் இது சாத்தியமாகிறது.

இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையில், இந்தியாவின் கடலோரப் பகுதிகளின் மேம்பாட்டுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு கூடுதல் கடன் சலுகைகளை உறுதி செய்ய இந்த நிதி நிலை அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடித்தலுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உள்பட 5 இடங்களில் நவீன மீன்பிடி துறைமுகங்கள் உருவாக்கப்படவுள்ளன. கடல் பாசி பண்ணை குறித்து நம்பிக்கை கொண்டுள்ளோம். இது கடலோர சமுதாயத்தினரின் வாழ்க்கையை முன்னேற்றும். கடல் பாசி உற்பத்திக்காக, பல்நோக்கு கடல் பாசி பூங்கா தமிழகத்தில் வரவுள்ளது.

தேவேந்திர குல வேளாளர் கோரிக்கை ஏற்பு

தமிழகத்தின் கலாசாரம் உலக அளவில் புகழ்பெற்றது.

தேவேந்திர குல வேளாளர் என்று அறிவிக்க வேண்டும் என்ற அவர்களது நீண்டகால கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அரசியல் சாசனத்தின் பட்டியலிடப்பட்டுள்ள 6, 7 பெயர்களில் அல்லாது, அவர்களது பாரம்பரியமான பெயரில் அவர்கள் இனி அழைக்கப்படுவார்கள்.

தேவேந்திர குல வேளாளர் என்றுபெயர்திருத்தம்செய்ய அரசியல்சாசனத்தைத்திருத்தும் வரைவு மசோதாவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து, நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. அடுத்த அமர்வின்போது இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு விடும்.

2015-ம் ஆண்டு டெல்லியில் தேவேந்திரர்களின் பிரதிநிதிகள் என்னை சந்தித்தபோது, பல அரசுகளிடம் தொடர்ந்து வலியுறுத்தியும், எதுவும் நடக்கவில்லை என்று தெரிவித்தனர். அவர்களது 'தேவேந்திர' என்னும் சொல் என்னுடைய பெயரின் 'நரேந்திர' என்பதை ஒத்துள்ளது என்று நான் கூறினேன். தேவேந்திர குல சமுதாயத்தினரின் கலாசாரத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகமுள்ளது. அவர்கள் நல்லிணக்கம், நட்பு, சகோதரத்துவம் கொண்டுள்ளனர்.

இலங்கை தமிழர்கள் நலன்

இலங்கையில் உள்ள நமது தமிழ் சகோதர, சகோதரிகளின் விருப்பம், நலன் மீது நமது அரசு எப்போதும் அக்கறைகொண்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு சென்ற ஒரே இந்திய பிரதமர் நான்தான் என்பதில் எனக்கு பெருமை. கடந்த காலத்தை விட அதிகமான வளங்களை, அந்நாட்டில் நமது அரசு தமிழர்களுக்காக வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள், தேயிலைத் தோட்டப் பகுதிகளில் 4 ஆயிரம் வீடுகள், தமிழ் சமுதாயத்தினருக்காக பிரத்யேக ஆம்புலன்ஸ் சேவை, திக்கோயாவில் ஒரு மருத்துவமனை, ரெயில் இணைப்பை ஊக்குவிக்க யாழ்ப்பாணத்துக்கு ரெயில்வே கட்டமைப்பு, இது மன்னார் வரை மறுகட்டமைக்கப்

(2–ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் ரூ.8,126 கோடியில் திட்டங்கள்

சென்னையில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

சென்னை, பிப்.15-
தமிழகத்தில் ரூ.8,126 கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

சென்னை வந்தார் மோடி

தமிழகத்தில் ரூ.8,126 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஒரு நாள் அரசுமுறை பயணமாக சென்னை வந்தார்.

இதற்காக தனி விமானத்தில் காலை 10.32 மணிக்கு சென்னை வந்திறங்கிய பிரதமர் மோடியை விமான நிலையத்தில் தமிழக அரசு தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், போலீஸ் டி.ஜி.பி. ஜே.கே.திரிபாதி மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

விமான நிலைய வரவேற்பு முடிந்ததும், பிரதமர் மோடி ஹெலிகாப்டரில் ஐ.என்.எஸ். அடையாறு கடற்படை தளத்துக்கு வந்திறங்கினார். அங்கு அவரை கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் ப.தனபால் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர். அங்கிருந்து பிரதமர் மோடி, விழா நடைபெற்ற நேரு உள் விளையாட்டு அரங்குக்கு சாலை வழியாக காலை சுமார் 11.30 மணிக்கு காரில் வந்து சேர்ந்தார்.

அங்கு அவர் சென்னை ஆவடி கனரகதொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, நாட்டுக்கு அர்ப்பணிக்க நிறுத்தப்பட்டிருந்த அதிநவீன அர்ஜூன் மார்க் 1-ஏ பீரங்கியை பார்த்தார். அந்த பீரங்கிக்கு வீர வணக்கம் செலுத்தினார். அதன் அருகில் சென்று அங்கிருந்த ராணுவ அதிகாரியிடம் அந்த பீரங்கியைப் பற்றி கேட்டறிந்தார். அதை இயக்கிய வீரர்களுடன் பிரதமர் மோடி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நடந்த அரங்கத்தின் பிரதான வாயிலுக்கு அவர் வந்தார். அங்கு தமிழக சட்டசபை சபாநாயகர் ப.தனபால், மூத்த அமைச்சர்கள், பா.ஜ.க. முன்னாள் எம்.பி. இல.கணேசன், கட்சி நிர்வாகி எச்.ராஜா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

மறைந்த முதல்-அமைச்சர்களுக்கு மரியாதை

அரங்கத்தில் உள்ள விழா மேடைக்கு காலை 11.35 மணிக்கு பிரதமர் மோடி வந்தார். அவரைத் தொடர்ந்து கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் ப.தனபால், அமைச்சர் எம்.சி.சம்பத் ஆகியோர் வந்தனர்.

மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த மறைந்த முதல்-அமைச்சர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் படங்களுக்கு பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கவர்னர் பன்வாரிலால் புரோகித் முன்னிலையில் விழா தொடங்கியது. விழாவுக்கு முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கினார். பிரதமர் மோடிக்கு முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி பொன்னாடை அணிவித்தார். துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் ப.தனபால் ஆகியோர் பொன்னாடைகளை பிரதமரின் கைகளில் வழங்கினர். முதல்-அமைச்சரும், துணை முதல்-அமைச்சரும் சாமி சிலைகளை அவருக்கு நினைவுப் பரிசாக அளித்தனர்.

திட்டங்களை தொடங்கினார் மோடி

விழா மேடைக்கு பிரதமர் மோடி வந்ததும், அங்கிருந்த அ.தி.மு.க., பா.ஜ.க. கட்சி நிர்வாகிகள் பலமாக வாழ்த்தொலி எழுப்பினர். துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றினார். அதைத் தொடர்ந்து முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையுரை ஆற்றினார்.

அதைத் தொடர்ந்து 3 திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 2 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பிரதமர் தொடங்கி வைத்த மற்றும் அடிக்கல் நாட்டிய திட்டங்கள் வருமாறு:-

★ ரூ.3,770 கோடி செலவில் முடிவுற்ற சென்னை மெட்ரோ ரெயில் முதல் கட்ட திட்டத்தின் 9.05 கி.மீ. விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரையில் பயணிகள் ரெயில் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

★ சென்னை கடற்கரைக்கும், அத்திப்பட்டுக்கும் இடையே ரூ.293.40 கோடி செலவில் 22.1 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள 4-வது ரெயில் பாதையை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார்.

★ விழுப்புரம்-கடலூர்-மயிலாடுதுறை-தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை - திருவாரூர் இடையில் ரூ.423 கோடி செலவில், மின்மயமாக்கப்பட்ட ஒருவழி ரெயில் பாதையை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து, அந்த பாதையில் இரண்டு சரக்கு ரெயில் போக்குவரத்தை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

★ ரூ.2,640 கோடி செலவிலான, கல்லணை கால்வாய்க்கான விரிவாக்கம், புதுப்பித்தல், நவீனப்படுத்துதல் திட்டத்திற்கும், செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் 2 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள சென்னை ஐ.ஐ.டி.யின் டிஸ்கவரி வளாகத்திற்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

★ ஆவடி கனரக தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட அதிநவீன அர்ஜூன் மார்க் 1-ஏ பீரங்கியை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அதை உணர்த்தும் வகையில், அதன் மாதிரி வடிவத்தை ராணுவ தளபதி நரவனேயிடம் வழங்கினார்.

★ பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்த திட்டங்களின் மதிப்பு ரூ.8,126 கோடியாகும். அந்த திட்டங்களின் குறும்படங்களும் விழாவின்போது ஒளிபரப்பப்பட்டன.

தமிழில் வணக்கம்...

இந்த திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் மோடி, 'வணக்கம், வணக்கம் சென்னை, வணக்கம் தமிழ் நாடு" என்று தமிழில் பேசி தனது உரையைத் தொடங்கினார்.

காஷ்மீரில் புல்வாமாவில் 2019-ம் ஆண்டு, பிப்ரவரி 14-ந் தேதி பயங்கரவாதிகள் தாக்குதலில் துணை ராணுவ வீரர்கள் பலியானதை பிரதமர் மோடி நினைவுகூர்ந்தார். அப்போது அவர், புல்வாமா தாக்குதல் நடந்து 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த சம்பவத்தை இந்தியர் யாருமே மறக்க முடியாது. அதில் நாம் இழந்த நமது துணை ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகிறோம். நமது பாதுகாப்பு படைகளால் நாம் பெருமை கொள்கிறோம். அவர்களின் தைரியமான செயல்பாடு, அடுத்த தலைமுறையினருக்கு ஊக்கம் அளிக்கும் என குறிப்பிட்டார்.

அவரது ஆங்கில பேச்சு தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது. விழா முடிந்த பின்பு, மேடையில் இருந்தபடி அனைவருக்கும் அவர் கையசைத்து விடை பெற்றார். விழாவுக்கு வந்திருந்த கூட்டணி கட்சியினருக்கு தனிப்பட்ட முறையில் கைகூப்பி வணக்கம் தெரிவித்தார்.

கைகளை உயர்த்திப்பிடித்த மோடி

மேடையை விட்டு புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு, முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரின் கைகளைப்பிடித்து மேடையின்

(7–ம் பக்கம் பார்க்க)